# இலண்டன் தமிழ் நிலையம் - திருக்குறள் போட்டி 2023

ஈ பிரிவு

| ஈ பிரிவு | ஆண்டு 4 / ஆண்டு 5 | Year 4 / Year 5 |
|---|---|---|

(திருக்குறளை மட்டும் மனனம் செய்யவும்)

**கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்**

**ஆற்றல் தலைப்பட் டவர்க்கு - 269**

*தவத்தால் வரும் வலிமையைப் பெற்றவரால் எமனையும் வெல்ல முடியும்.* Those who have attained the power which religious discipline confers, will be able also to pass the limit of Yama, (the God of death).

**தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்**

**தன்நெஞ்சே தன்னைச் சுடும் - 293**

*பொய் என்று உள்ளம் உணர்த்துவதைச் சொல்ல வேண்டா. சொன்னால், அதைப் பொய் என்று உலகு அறிய நேரும்போது தன் மனமே தன்னைச் சுடும்.* Let not a man knowingly tell a lie; for after he has told the lie, his mind will burn him (with the memory of his guilt).

**செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது**

**வயிற்றுக்கும் ஈயப் படும் - 412**

*செவிக்கு உணவாகிய கேள்வி கிடைக்காதபோது, வயிற்றுக்கும் சிறிது உணவு இடப்படும். When there is no food for the ear, give a little also to the stomach.*

**நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**

**பகலும்பாற் பட்டன்று இருள் - 999**

*பிறரோடு கலந்து பழகி மகிழ முடியாதவர்க்கு, மிகப் பெரிய இந்த உலகம் ஒளியுள்ள பகற் காலத்திலும் இருளில் கிடப்பதாம். To those who cannot rejoice, the wide world is buried darkness even in (broad) day light.*

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்**

**தொழுதுஉண்டு பின்செல் பவர் - 1033**

*உழவு செய்து அதனால் கிடைத்ததைக் கொண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர், மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே. They alone live who live by agriculture; all others lead a cringing, dependent life.*